நாள் : *02.12.2024*

இரவு *8* மணி நிலவரம்

**செய்தி வெளியிடு**

**பெருநகர சென்னை மாநகராட்சி**

## வடகிழக்குப் பருவமழை நடவடிக்கைகள் விவரம்

<u>பெருநகர சென்னை மாநகராட்சி</u>

- ❖ பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் கடந்த *01.10.2024* காலை *8.30* மணி முதல் *02.12.2024* காலை *8.30* மணி வரை பதிவான மழையின் அளவு – *806.95* மி.மீ.
- ❖ *01.12.2024* காலை *8.30* மணி முதல் இன்று *02.12.2024* இரவு *8.00* மணி வரை பெய்த மழையின் அளவு சராசரியாக *0.09* மி.மீ.
- ❖ அதிகபட்சமாக பெரம்பூரில் *0.90* மி.மீ. மழை அளவும், குறைந்த பட்சமாக அயப்பாக்கத்தில் *0.30* மி.மீ. மழை அளவும் பதிவாகியுள்ளது.
- ❖ *30.11.2024* அன்று காலை, மதியம், இரவு என மொத்தம் *6,35,300* நபர்களுக்கு உணவு வழங்கப்பட்டுள்ளது. நேற்று *(01.12.2024)* காலை, மதியம், இரவு என மொத்தம் *5,30,150* நபர்களுக்கு உணவு வழங்கப்பட்டுள்ளது. இன்று *(02.12.2024)* காலை உணவு *24,000* நபர்களுக்கும், மதியம் உணவு *7,000* நபர்களுக்கும், இரவு உணவு *7,000* நபர்களுக்கும் என மொத்தம் *38,000* நபர்களுக்கு உணவு வழங்கப்பட்டது.
- ❖ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி சென்னையில் உள்ள *386* அம்மா உணவகங்களிலும் *30.11.2024*

அன்று இலவசமாக உணவு வழங்கப்பட்டது. இவற்றின் மூலம் 1,07,047 நபர்களுக்கு உணவு வழங்கப்பட்டது.

❖ மழைக்காலத்தினை முன்னிட்டு, 15.10.2024 முதல் 01.12.2024 வரை சென்னையில் மட்டும் இதுவரை 2,839 மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டது. இதன் மூலம் 1,53,120 நபர்கள் பயனடைந்துள்ளனர். இன்று (0.12.2024) 192 இடங்களில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடைபெற்றது. 10,226 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

❖ தற்போது பெய்த மழையின் காரணமாக 33 இடங்களில் இருந்த நீர்த்தேக்கத்தில் 25 இடங்களில் மழைநீர் வெளியேற்றப்பட்டுள்ளது. மீதமுள்ள 8 இடங்களில் துரிதமாக மழை நீர் அகற்றும் பணி போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

❖ இன்று (02.12.2024) மழையின் காரணமாக விழுந்த 16 மரம் விழுந்துள்ளது. விழுந்த 16 மரங்களும் அகற்றப்பட்டன.

❖ சென்னையில் உள்ள 22 சுரங்கப்பாதைகளில், கணேசபுரம் சுரங்கப்பாதையில் இரயில்வே மேம்பாலப் பணி காரணமாக தற்காலிகமாக போக்குவரத்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள சுரங்கப்பாதைகளில் போக்குவரத்து சீராக உள்ளது.

❖ பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் **361** இடங்களில் நிவாரண மையங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

❖ நிவாரண மையங்களில் தற்போது எவரும் இல்லை

❖ நிவாரண மையங்களில் உணவு, சுகாதார வசதி, குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளன.

- பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் நிவாரண மையங்களுக்கு உணவு வழங்க 101 மைய சமையல் கூடங்கள் தயார் நிலையில் உள்ளன.
- மழைநீர் தேங்கும் இடங்களில் மழைநீரை வெளியேற்றும் வகையில் பல்வேறு திறன் கொண்ட 1,686 மோட்டார் பம்புகள் தயார் நிலையில் உள்ளன.
- தற்போது 100Hp மோட்டார் பம்புகள் 137 எண்ணிக்கையில் தயார் நிலையில் உள்ளன.
- தற்போது தயார் நிலையில் டிராக்டர் மேல் 484 மோட்டார் பம்புகள் பொருத்தப்பட்டு தயார் நிலையில் உள்ளன.
- பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் விழும் மரங்களை அகற்றுவதற்காக ஹைட்ராலிக் மர அறுவை இயந்திரங்கள் 9 , ஹைட்ராலிக் ஏணி 2 , மர அறுவை இயந்திரங்கள் 262 , டெலஸ்கோபிக் மர அறுவை இயந்திரங்கள் 216 என மொத்தம் 489 இயந்திரங்கள் தயார் நிலையில் உள்ளன.
- தாழ்வான பகுதிகளில் உள்ள பொதுமக்களை மீட்டு நிவாரண மையங்களில் தங்க வைப்பதற்காக 103 படகுகள் தயார்நிலையில் உள்ளது. இதில் 36 படகுகள் மாநகராட்சிக்கு சொந்தமாக வாங்கி தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.
- 15.10.2024 முதல் 02.12.2024 வரை பொதுமக்களிடமிருந்து மழைத் தொடர்பாக 1913 என்ற உதவி எண்ணிற்கு 53,456 புகார்கள் பெறப்பட்டு, 41,303 புகார்களுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 12,153 புகார்களுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

❖ வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு பெருநகர சென்னை மாநகராட்சியில் அலுவலர்கள், பொறியாளர்கள், பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்ட *22* ஆயிரம் பேர் மழை வெள்ள மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

❖ மழை வெள்ள களப்பணிகளில் ஈடுபட இதுவரை *18,500* தன்னார்வலர்கள் பதிவு செய்துள்ளனர்.

**<u>சென்னை குடிநீர் வாரியம்</u>**

❖ *299* தூர்வாரும் இயந்திரங்கள்.

❖ *73* அதிவேக கழிவு நீர் உறிஞ்சும் வாகனங்கள்.

❖ *225* ஜெட்ராடிங் வாகனங்கள்.

❖ பிற மாவட்டங்களில் இருந்து வரவழைக்கப்பட்டுள்ள *45* கழிவுநீர் ஊர்திகள் என மொத்தம் *642* கழிவுநீர் அகற்றும் இயந்திரங்கள் கழிவுநீர் அகற்றும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

❖ *15* மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றும் பணிகளை *2149* களப்பணியாளர்கள் மேற்கொண்டு வருகிறார்கள்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**